## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 288/2023** |
| Deposition of Witness for | : | **P.W.6** |
| Name | : | **முத்துப்பாண்டி** |
| Father's Name | : | **அழகர்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **45/2026** |

**(வழக்கின் 1,2-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21.07.2026.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கை சாக்கலா தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சாட்சி ஜான்வேதமுத்து என்பவரை தெரியும். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு நான் மதகுபட்டியிலிருந்து வரும்போது சாமியார்பட்டி என்ற இடத்திற்கு அருகே மதியம் வந்தபோது போலிசார் வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்ன வரைபடம் வரைந்தார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. ஏதோ நடந்ததற்காக என்னிடம் எனது கையொப்பத்தை வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள முத்துப்பாண்டி என்ற 2 வது கையொப்பம் என்னுடையது தான்.

அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.5** ஆகும். போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 26.09.2022ம் தேதி காலை 9.30 மணியளவில் சிவகங்கை நகர் காவல்நிலைய ஆய்வாளர் இவ்வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்காக நான் எனது கையொப்பத்தை போட்டுக்கொடுத்தேன் என்றும் தற்போது வேண்டுமென்றே எதிரிகளுக்கு சாதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

SUBRAMANIAN MOHANA RAMYA

Digitally signed by SUBRAMANIAN MOHANA RAMYA
Date: 2026.07.21 16:28:12 +0530

**Chief Judicial Magistrate,**

**Sivagangai.**